மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 76/2015

பெயர் : விஜயகுமார்
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 14.11.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பு)**

1. பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆகிய இரண்டு கிரைய பத்திரங்களுக்கும் மூல ஆவணமாக ஆவணையின் 988/2012 என்ற எண்ணுள்ள பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் மூல ஆவணம் கிடையாது. பி.வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தின் படி க.ச.172/1 காலையில் உள்ள பூமி கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ–2 ஆவணங்களில் உள்ள அளவுகளை என்றாவது நான் சரிபார்த்து உள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

2. நஞ்சப்ப கவுண்டரின் இறப்பிற்குப் பின்னர் அவருடைய சொத்துக்கள் எந்த காலையில் எவ்வளவு விஸ்தீரணம், ஆறு குட்டி என்கிற ஆறுமுகம், சென்னியப்பன் பகிர்ந்து கொண்டார்கள் என்ற விவரங்கள் எதுவும் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல நாங்கள் கூட்டாக தான் அனுபவித்து வந்தோம். க.ச.172 மற்றும் க.ச.174 காலைகளில் மொத்த சொத்துக்களில் வாதிக்கு விற்றதுபோக மீதம் உள்ளதாக நான் சொல்லும் 39 ½ செண்ட், 59 செண்ட் பூமி எந்த பட்டாவில் புல வரைபடத்தில் எந்த திசையில் ஒதுக்கப்பட்டுள்ளது என பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

3. மேற்படி சொத்துக்கள் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் விற்றது போக மீதம் உள்ளதை அனுபவித்து வருகிறோம். மீதம் எந்த சொத்தும் கிடையாது என்றும், வாதியிடமிருந்து சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ–4, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 கிரைய ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் புல வரைபடத்திலோ, பட்டாவிலோ எங்கு உள்ளது

என பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் அது பற்றி தெரியாது. எங்கள் சொத்து மட்டும் தான் தெரியும்.

4. சொத்துக்கள் பற்றி முழுமையாக எந்த விவரமும் தெரியாமல் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று மறுப்பதற்கு எனக்கு எந்த அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. கனகராஜ் மற்றும் அவரது குடும்பத்தார் எனக்கு பங்காளி உறவு முறையினர் ஆவார்கள். கனகராஜ் மற்றும் அவரது குடும்பத்தினர் வாதிக்கு விற்ற சொத்துக்கள் எங்களுக்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தை பிரதிவாதிகள் படித்து பார்க்க விடாமல் வாதி தீய எண்ணத்துடன் சொத்துக்களை ஏமாற்றி வாங்கும் நோக்கத்தில் தயார் செய்து கையொப்பம் வாங்கினார் என்ற விவரம் வழக்கறிஞர் சொல்லித்தான் தெரியும் என 20 வருடங்கள் கழித்து எதிர்வாதம் செய்வது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

5. க.ச.174/4 மற்றும் க.ச.172/1 காலைகளில் நாங்கள் வாதிக்கு விற்ற கிரைய ஆவணங்களில் கண்டுள்ள செக்குப்பந்திகளில் வாதி வேலி அமைத்துக்கொள்ள எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல. செக்குப்பந்திகள் தவறாக உள்ளது. சொத்துக்களை செக்குபந்திகள் குறிப்பிட்டு எழுதி கொடுத்துவிட்டு தற்போது செக்குப்பந்தி தவறானது என்று இடையூறு செய்து எதிர்வாதம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தற்போது சொத்தின் மதிப்பு உயர்ந்து விட்டதால் சொத்தின் மீது கொண்ட ஆசையின் காரணமாக சொத்தின் செக்குப்பந்தி தவறாக உள்ளது என்று இடையூறு செய்கின்றேன் என்றால் சரியல்ல.

6. க.ச.174/4 காலைக்கான பட்டாவில் எங்கள் பெயரும், வாதியின் பெயரும் கூட்டாகத்தான் உள்ளது என்றால் சரிதான். க.ச.172/1எ காலைக்கான பட்டாவில் எங்கள் பெயரும், வாதியின் பெயரும் கூட்டாகத்தான் உள்ளது என்றால் சரிதான். **க.ச.174/4 காலைக்கான கணிணி பட்டா வா.சா.ஆ.8 மற்றும் க.ச.172/1எ காலைக்கான கணிணி பட்டா வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.** என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் க.ச.174 மற்றும் க.ச.172 காலைகளுக்கான புல வரைபடங்கள் என்றால் சரிதான். **க.ச.174 காலைக்கான புலவரைபடம் வா.சா.ஆ.10 மற்றும் க.ச.172 காலைக்கான புலவரைபடம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.**

7. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் மூல ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கு சொத்தில் உரிமை உள்ளது தெளிவாகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் க.ச.174/4 காலையில் எனக்கு பாத்தியப்பட்ட 40 செண்ட் பூமியை அளந்தார் என்றால் சொத்து முழுமையாகத்தான்

அளந்தார். நீதிமன்ற ஆணையரிடம் எனக்கு சொத்து அதிகமாக உள்ளது என்று அளந்து கொடுக்க கோரினேனா என்றால் நீதிமன்ற ஆணையர் நீதிமன்றம் பணித்துள்ள பணியை செய்ய தான் வந்துள்ளதால் அவர்களிடம் நான் கோரவில்லை. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றும், ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.14 18:22:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.